| | | |
|---|---|---|
| சாட்சி : DW 2<br>சௌந்தரராஜன் | அ.வ.எண்.220/2017 | 07.09.2022 |

குறுக்கு விசாரணை தொடர்ச்சி

நான் இந்த வழக்கில் தாக்கல் செய்த புகைப்படம் அனைத்தும் தாவா சொத்துக்குரியது அல்ல என்றால் சரியல்ல தாவா சொத்துக்கான புகைப்படங்கள் தான். நான் மேற்படி சொல்வது தவறு என்றால் சரியல்ல. நான் பி.வா.சாஆ.3 முதல் 6 வரையுள்ள ஆவணங்கள் மூலமாக தான செட்டில்மெண்டு ஆவணத்தின் மூலமாக தாவா சொத்தின் சுவாதீனத்தை பெறவில்லை என்றாலும், மேற்படி ஆவணங்கள் நடைமுறைக்கு வரவில்லை என்றாலும் சரியல்ல. இந்த வழக்கின் வாதிகள் தாவா சொத்தில் குத்தகைதாரர் என்றாலும், அவர்கள் குத்தகை சாகுபடி செய்துவந்தார்கள் என்றாலும் சரியல்ல. எனது தந்தைக்கு ஒரு கால் இல்லை என்றால் சரிதான். எனது தந்தை தாவா சொத்தினை வாங்கிய பிறகு எந்த காலத்திலும் நேரடியாக சாகுபடி செய்யவில்லை என்றால் சரியல்ல எனது தகப்பனார் மற்றும் தாயார் தான் சாகுபடி செய்தார். எனது பெற்றோர்கள் பஞ்சாப் மற்றும் டெல்லியில் வருமானத்திற்காக இருந்தார்கள் என்றால் இல்லை. எனது பெற்றோர் மேற்படி ஊரில் இருந்தார்கள் என்பதற்கு ஆவணங்களை தாக்கல் செய்து நிரூபணம் செய்தால் நான் பொய் சாட்சியம் சொன்னதற்காக தண்டிக்கப்படுவேன் என்பது எனக்கு தெரியும் என்றால் தற்போது சாட்சி எனது தந்தை சண்டிகரில் சில வருடங்களாக உறவினர் வீட்டில் இருந்தார். எனது தாயார் தான் எங்களுடன் தாவா கிராமத்தில் இருந்தார். (பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் மேற்படி கேள்வி குறித்து வழக்குரை மற்றும் பதில்

எதிர்வழக்குரையில் சங்கதிகள் தெரிவிக்காததால் ஆட்சேபனை தெரிவித்து மேற்படி கேள்வி பதிவு செய்யப்படுகிறது.) எனது தாயார் இறந்தது 1997 வருடம் இறந்தார். நான் சென்னையில் எந்த வருடம் இருந்தேன் என்றால் 2007 ல் இருந்தேன். 3ம் பிரதிவாதி செல்விக்கு எப்போது திருமணம் நடைபெற்றது என்றால் 1986 ல் நடந்தது. எனது மற்றொரு சகோதரி 4ம் பிரதிவாதிக்கு எப்போது திருமணம் நடைபெற்றது என்றால் 1993 ல் நடந்தது. தாவா கிராமத்தில் 2ம் பிரதிவாதி மற்றும் அவர்கள் குடும்பம் மட்டும் தான் இருந்தார்கள் என்றால் இல்லை நாங்களும் இருந்தோம். இந்த வழக்கின் வாதிகள் மற்றும் 1ம் வாதியின் கணவர் மட்டும் தான் தாவா சொத்தில் அனுபவம் செய்துவந்தார்கள் என்றாலும், நாங்கள் வெளியூரில் இருந்து வந்ததால் எங்களிடம் குத்தகை சாகுபடி கொடுத்து வந்தார்கள் என்றாலும் சரியல்ல. தாவா தாக்கல் செய்த காலத்தில் செட்டில்மெண்டு ஆவணத்தை பயன்படுத்தி கொண்டு வாதிகளின் சுவாதீனத்தில் இடையூறு செய்த காரணத்தினால் தான் இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள் என்றாலும், தாவாப்படி தீர்ப்பாக வேண்டும் என்று சொன்னாலும் சரியல்ல.